**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 18.04.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்றிரவு 8.30 மணிக்கு நாட்டு மக்களிடையே உரையாற்றவுள்ளார்.
- நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.
- உலக பாரம்பரிய தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
- ஹஜ் புனித யாத்திரைக்காக இன்று புதுடெல்லியிலிருந்து 371 பேர் சவுதி அரேபியாவின் மெக்கா நகருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

*பிரதமர் (11)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்றிரவு 8.30 மணிக்கு நாட்டு மக்களிடையே உரையாற்றவுள்ளார். பெண்கள் இட ஒதுக்கீடு தொடர்பான அரசியலமைப்பு திருத்த மசோதா, எதிர்க்கட்சிகளின் ஆதரவில்லாத காரணத்தினால், மக்களவையில் நிறைவேற்றத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை பெறத் தவறிய ஒரு நாளுக்குப் பிறகு இந்த உரையாடல் நிகழ்கிறது. தொகுதி மறு வரையறை வாயிலாக பெண்களுக்கு இட ஒதுக்கீட்டை செயல்படுத்துவதை மையமாகக் கொண்ட இந்த முன்மொழியப்பட்ட சட்ட மசோதா, நீண்ட விவாதத்திற்குப் பிறகு நிறைவேறாமல் போனது குறிப்பிடத்தக்கது.

*நாடாளுமன்றம் - 1 (03)*

நாடாளுமன்ற இரு அவைகளும் மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டதை அடுத்து பட்ஜெட் கூட்டத் தொடரின் சிறப்புக் கூட்டம் இன்று நிறைவடைந்தது. இது குறித்த கூடுதல் தகவல்... (வாய்ஸ்)

*நாடாளுமன்றம் - 1 (16)*

முன்னதாக, மக்களவையில் இன்று நிறைவுரையாற்றிய மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரில் 93 சதவிகித பணிகள் நிறைவு பெற்றதாக குறிப்பிட்டார். 31 அமர்வுகள் இடம் பெற்றதாகவும், 12 மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டு 9 மசோதாக்கள் நிறைவேறியதாகவும் எடுத்துரைத்தார். மாநிலங்களவையில்

நிறைவுரையாற்றிய அவைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் 157 மணி நேரத்திற்கும் அதிகமாக அவை செயல்பட்டதாகவும், 110 சதவிகித பணிகள் நிறைவுபெற்றதாகவும் எடுத்துரைத்தார். விவாதங்களில் பங்கேற்று சிறப்புரையை வழங்கிய உறுப்பினர்களை பாராட்டிய அவர், மேற்காசிய நெருக்கடி குறித்தும், அதனால் ஏற்பட்ட சவால்களையும், எரிசக்தி தேவைகளையும், இந்தியா எதிர்கொண்டது குறித்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவையில் உரையாடியதை சுட்டிக்காட்டினார். கடந்த ஜனவரி 28ஆம் தேதி நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கி 2 கட்டங்களாக நடைபெற்ற நிலையில் கடந்த 2ஆம் தேதி இக்கூட்டத்தொடர் நிறைவடைந்தது. கடந்த 16ஆம் தேதி தொடங்கிய பட்ஜெட் கூட்டத் தொடரின் சிறப்புக் கூட்டமும் இன்று நிறைவடைந்தது.

*தேர்தல் பிரச்சாரம் (12)*

தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்தில் தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்ட வாகன சோதனையில் இதுவரை 865 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மேற்கு வங்கத்தில் இதுவரை 427 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்களும், தமிழகத்தில் 438 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் 2 ஆயிரத்து 283 மற்றும் மேற்கு வங்கத்தில் 2, ஆயிரத்து 728 தேர்தல் பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டு வருவதாக தேர்தல் ஆணையம் மேலும் தெரிவித்துள்ளது. இரு மாநிலங்களிலும் 5 ஆயிரத்து 363 நிலையான தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் பணியில் ஈடுபட்டு வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பாரம்பரிய தினம் (15)*

உலக பாரம்பரிய தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. உலக பாரம்பரியச் சின்னங்களை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் யுனெஸ்கோ சார்பில் ஒவ்வொரு ஆண்டும் இந்த நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. இது குறித்த கூடுதல் தகவல்... **(வாய்ஸ்)**

*பாரம்பரிய தினம் (12)*

இந்நாளையொட்டி பாரம்பரியச் சின்னங்களின் பாதுகாப்பு குறித்த புகைப்படக் கண்காட்சி மற்றும் கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா

வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், நமது நாடு வரலாற்றுச் சிறப்பு மிக்க கலாச்சார வேற்றுமையில் ஒற்றுமையுடன், பாரம்பரிய பெருமையுடன் திகழ்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்நாளையொட்டி மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாரம்பரியம் மற்றும் கலாச்சாரமிக்க சுற்றுலா தலங்களை தூய்மையுடன் பராமரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். கோவில் சுவர்கள், கோட்டை மதில்கள் மற்றும் நாட்டுப்புற பாடல்கள் நமது கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

*சி.பி. ராதாகிருஷ்ணன் (12)*

உலக பாரம்பரிய தினத்தையொட்டி குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் வாழ்த்து தெரிவித்துள்ளார். நாட்டின் வளமான கலாச்சாரமும், இயற்கையான மரபுகளும் நம் தேசத்தின் தனி அடையாளமாக திகழ்கிறது என்று கூறியுள்ளார். தொன்மையான நினைவுச் சின்னங்கள், புனித இடங்கள் உள்ளிட்டவை நமது கலாச்சாரத்தையும், சுற்றுச் சூழல் வளத்தையும், மக்களின் உணர்வுகளையும் பிரதிபலிப்பதாக எடுத்துரைத்தார். நம் நாட்டின் அரிய பாரம்பரிய கலாச்சார சொத்துகளை எதிர்கால தலைமுறையினருக்காக பாதுகாக்கும் பொறுப்பு நமக்கு உள்ளதை இன்றைய தினம் நினைவூட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நம் கலாச்சாரத்தை பாதுகாத்து விழிப்புணர்வை ஏற்படுத்த இந்நாளில் உறுதியேற்க திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

*ஹஜ் (16)*

ஹஜ் புனித யாத்திரைக்காக இன்று புதுடெல்லியிலிருந்து 371 பேர் சவுதி அரேபியாவின் மெக்கா நகருக்குப் புறப்பட்டுச் சென்றனர். புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ஹஜ் புனித யாத்திரைக் குழுத் தலைவர் திரு.கௌசர் ஜஹான் யாத்ரீகர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். பாதுகாப்பாகவும், சுமூகமாகவும், ஹஜ் புனித யாத்திரையை மேற்கொள்ள மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக திரு. ஜஹான் கூறினார். புதுடெல்லி விமான நிலையத்தில் மத்திய சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான செயலர் டாக்டர் ஸ்ரீவத்சா கிருஷ்ணா கொடியசைத்து யாத்ரீகர்களை வழியனுப்பி வைத்தார். ஹஜ் பயணம் மேற்கொள்ளும் அனைத்து யாத்ரீகர்களுக்கும் வாழ்த்து தெரிவித்துள்ள மத்திய சிறுபான்மை விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, ஹஜ் பயணிகளின்

பாதுகாப்பான பயணத்திற்கு மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக கூறினார். இந்த ஆண்டு 1 லட்சத்து 75 ஆயிரம் யாத்ரீகர்கள் சவுதி அரேபியாவுக்குப் புனிதப் பயணம் மேற்கொள்ள இருப்பதாக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*ஹார்மூஸ் -1(18)*

ஹார்மூஸ் நீரிணை வழியாக எண்ணெய்க் கப்பல்கள் பாதுகாப்பாக செல்வதை உறுதி செய்வதற்கான பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகள் கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டத்திற்கு இந்தியாவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. புதுடெல்லியில் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், உலகளவில் 20 சதவிகித எண்ணெய் வர்த்தகம், ஹார்மூஸ் நீரிணை வழியாக நடைபெறுவதாக தெரிவித்தார். பிரிட்டன் பிரதமர் திரு. கெய்ர் ஸ்டார்மர், பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரான் ஆகியோர் இது தொடர்பாக பாரீசில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். ஹார்மூஸ் நீரிணை வழியாக தடையற்ற கப்பல் போக்குவரத்துக்கு வழிவகை செய்வதற்காக 40 நாடுகளின் பிரதிநிதிகளுடன் காணொளி வாயிலாக ஆலோசனை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஹார்மூஸ் நீரிணை வழியாக எண்ணெய் கப்பல்கள் செல்ல அனுமதிக்கப் போவதாக ஈரானின் அறிவிப்பை ஆஸ்திரேலியா வரவேற்றுள்ளது. ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ஆண்டனி அல்பெனிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் இஸ்ரேல்-லெபனான் இடையேயான சண்டை நிறுத்த அறிவிப்பு அப்பகுதியில் அமைதியை நிலைநாட்ட வழிவகை செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

*ஹார்மூஸ் -2 (04)*

இதனிடையே ஆஸ்திரேலியாவில் 46 நாட்களுக்குத் தேவையான பெட்ரோல், 31 நாட்களுக்குத் தேவையான டீசல், 30 நாட்களுக்குத் தேவையான விமான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக அந்நாட்டு எரிசக்தி துறை அமைச்சர் திரு. கிரிஸ் போவன் தெரிவித்துள்ளார்.

*சபரிமலை (10)*

கேரளாவில் அமைந்துள்ள புகழ்பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவில், எட்டு நாட்கள் நடைபெற்ற வருடாந்திர விஷுப் பண்டிகையின் நிறைவை முன்னிட்டு, இன்று இரவு 10 மணிக்கு நடை சாத்தப்பட உள்ளது. ஏப்ரல் 10-ஆம் தேதி திறக்கப்பட்ட இக்கோவிலில் விஷுப் பண்டிகை மற்றும் மாதப்

பூஜைகளுக்காக பக்தர்கள் கலந்து கொண்டனர். புதன்கிழமை அதிகாலையில் 'விஷு கனி தரிசனம்' நடைபெற்றது. அப்போது, மூலவர் சன்னிதிக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த மங்கலப் பொருட்களைத் தரிசிப்பதற்காகப் பக்தர்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். ஐந்து நாட்கள் நடைபெறும் மாதப் பூஜைகளுக்காக, இக்கோவில் மீண்டும் மே மாதம் 14-ஆம் தேதி திறக்கப்பட உள்ளது.

*வானிலை (07)*

தமிழகம் வழியாக வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப்பாதை நிலவுவதால், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கடலோரப்பகுதிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று முதல் வரும் 22ஆம் தேதி வரை பரவலான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஏனைய தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலையே நிலவக்கூடும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*கிரிக்கெட் (06)*

ஐபில் 20-20 கிரிக்கெட் ஓவர் போட்டியில் ஹைதாராபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கிடையிலான மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டி தொடரின் 2ஆவது போட்டி டர்பனில் நாளை நடைபெறுகிறது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்றிரவு 8.30 மணிக்கு நாட்டு மக்களிடையே உரையாற்றவுள்ளார்.

நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

உலக பாரம்பரிய தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

ஹஜ் புனித யாத்திரைக்காக இன்று துடெல்லியிலிருந்து 371 பேர் சவுதி அரேபியாவின் மெக்கா நகருக்குப் புறப்பட்டுச் சென்றனர்.